

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியம் புதுவாயல் ஊராட்சியில் வேளாண் துறை சார்பில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் திட்ட துவக்க விழாவை முன்னாள் மாவட்ட செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் கலந்து கொண்டு துவக்கி வைத்தார், உடன் கே.ஜி.நமச்சிவாயம், எஸ். ராமஜெயம், மு.பாஸ்கர், கே.வி.நாகராஜ், பா.சுரேஷ், என்.எஸ்.மூர்த்தி, பி.வி.புருஷோத்தமன், முரளி, கார்த்தி, கபில், ராஜேஷ், எ.கே.முரளி, எஸ்.உதயகுமார், சரவணன், சினிவாசன், மோகன், சேகர், நீலநாராயணன், தியாகு, மாரிமுத்து உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## தி.மு.க. அயலக அணி

## திருச்சி மத்திய மாவட்டம் திருச்சி மாநகரம் (மேற்கு) அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா அறிவிப்பு!**

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. அயலக அணியின் திருச்சி மத்திய மாவட்டம்- திருச்சி மாநகரம் (மேற்கு) அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருச்சி மத்திய மாவட்டம்

### திருச்சி மாநகரம் (மேற்கு)

தலைவர் – எம். சிவதாஸ், 78இ, மேலவண்ணாரப்பேட்டை புத்தூர், திருச்சி – 17.

துணைத் தலைவர் – பா. அப்தாலிக் 39, கிருஷ்ணாபுரம் நடுத் தெரு, திருச்சி.

அமைப்பாளர் – எம்.ஜ. துபேல் அகமது 62/எ, 2வது கிராஸ் பாத்திமா நகர், உறையூர், திருச்சி.

துணை அமைப்பாளர்கள் – 1) டி. சதீஷ்குமார் 47, காமராஜர் தெரு, தென்னூர், திருச்சி. 2) என். மணிகண்டன் ஸ்ரீஜித் அபார்ட்மெண்ட், லிங்கம் நகர், உறையூர், திருச்சி – 3. 3) ஜெ. மரிய மிதுன் ராஜ் 36/34ஏ, சங்கீதபுரம், தென்னூர், திருச்சி. 4) எஸ். கார்த்திக் 3, கீழத் தெரு, உய்யகொண்டான் திருமலை, திருச்சி. 5) அ. ஆசிக் உசேன் 18, செவந்தி பிள்ளையார் கோவில் தெரு, உறையூர், திருச்சி – 3.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 05-07-2025.

எம்.எம். அப்துல்லா, எம்.பி.,
செயலாளர்
தி.மு.க. அயலக அணி

## அருந்தமிழ்ப் பெருங்கவிக்கோ ஆலமரம் சாய்ந்ததே...!



அருங்கவிக்கோ என்றே அனைவரும் போற்றிய
ஆலமரம் "பெருங்கவிக்கோ" வாமுசே
தமிழறிஞர்
விரைந்து மறைந்தாரே விண்ணுலகம்
சென்றாரே...!
வேதனையில் துடித்து விம்முகிறேன் துக்கத்தில்...

தொன்னூறு அகவையிலும் தொய்வின்றித் தமிழ்ப்பணி
தொடர்ந்து பணியாற்றி நிமிர்ந்து நின்றாரே...
அன்னையாம் தமிழன்னைக்கு அணிமகுடம் சூட்டி அழகுபார்த்து
மகிழ்ந்திட்ட ஆலமரம் சாய்ந்ததே...!

இறுதிமூச்சு வரைக்கும் தமிழுக்கே என்று
இறுமாப்போடு முழக்கமிட்ட செந்தமிழ்ச் சிங்கம்!
உறுதியோடு கலைஞரின் கரங்கள் பற்றி
உற்சாகமாய் உலாவந்த கொள்கைத் தங்கம்!

உலகத்தின் கவிஞர்கள் அனைவரோடும் உறவுகொண்டு
உலாவந்த பெருங்கவிஞர் நம்மைவிட்டுப் பிரிந்தாரே - இவர்
வலம்வந்து தமிழ்ப்பணிக்கு செல்லாத நாடில்லை
வாமுசேயின் கவிஆற்றலுக்கு எதுவுமே ஈடில்லை

மாண்புமிகு தளபதியிடம் மாசற்ற அன்புகொண்டு
மனமுவந்து சாதனைகளை எழுதியே குவித்தாரே...
"மண்மொழி மானம்காக்கும் மாமுதல்வர்" என்று
மாகவிதையை நேற்றைய முரசொலியில் எழுதினாரே...

இரண்டுநாள் முன்புதான் கி.வீரமணி அய்யாவை
இருவருமே இணைந்துசென்று சந்தித்து வந்தோம்...
திரண்டு வந்து அந்நினைவு தேம்பவைத்துவிட்டதே...
தேறுதலுக்கு இடமின்றி புலம்பவைத்து விட்டதே...!

இப்படிஒரு தமிழறிஞரை இப்புவியில் இனிமேல்
எப்போது காண்போம்! எங்குஇனி தேடுவோம்
முப்போதும் தமிழ்தமிழ்என மூச்சுவிட்ட பெருங்கவிக்கோ
முத்தமிழாய் நம்மிடையே வாழ்ந்துகொண்டே இருப்பார்!



-கவிஞர்
இரவிபாரதி

### தள்ளாத வயதிலும்

## மொழி உணர்வைப் பரப்பிட ஓயாது நடைபயணம் மேற்கொண்டவர்!

### பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் மறைவு குறித்து கி.வீரமணி இரங்கல் !

சென்னை, ஜூலை 6-

"தள்ளாத வயதிலும் மொழி உணர்வைப் பரப்பிட ஓயாது நடைபயணம் மேற்கொண்டவர்" என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் மறைவு குறித்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



இது குறித்து அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:-

பெருங்கவிக்கோ என்ற நாடறிந்த புலவர் பெருமகன் வா.மு.சேதுராமன் (வயது 91) நேற்றிரவு (4.7.2025) மறைவுற்றார் (1935-2025) என்ற தகவல் அறிந்து பெரிதும் வருந்துகிறோம்.

எளிய குடும்பத்தில் பிறந்து, தன்னிகரற்ற தனி முயற்சியால் தமிழ் வித்துவான், முதுகலை, சென்னைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பணியில் ஓய்வு பெற்றாலும் தமிழ்ப் பணியில் ஓய்வு பெற்றாரில்லை.

'தமிழ்ப்பணி' என்னும் மாத இதழையும் நடத்தி வந்தவர்.அவரது அரும் பணிக்காக தமிழ்நாடு அரசால் 'கலைமாமணி', 'திருவள்ளுவர் விருது'களைப் பெற்றவர். கவிதை, காவியம், நாடகங்கள் என்று எண்ணற்ற நூல்களை எழுதி உள்ளார்.

தள்ளாத வயதிலும் மொழி உணர்வையும், இன வுணர்வையும் பரப்பும் வகையில் ஓயாது நடை பயணம் மேற்கொண்டவர்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல; உலகின் பல நாடுகளையும் சுற்றி தமிழ்த் தொண்டாற்றியவர். சில மாதங்களுக்கு முன்புதான் அவரின் 90ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா பெரியார் திடலில் சிறப்புடன் நடத்தப்பெற்று, நாமெல்லாம் கலந்து கொண்டு, வாழ்த்தி மகிழ்ச்சியுற்றோம். சென்னை பெரியார் திடலில் நடக்கும் நமது எல்லா நிகழ்ச்சிகளிலும் முதல் வரிசையில் அமர்ந்து அக மகிழ்ந்தவர். அவருக்கு நான்கு மகன்கள், ஒரு மகள் உண்டு. அனைவரும் உயர் தனிக் கல்வி பெற்று உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பெரும் பணிகளில் சிறப்பாக வாழ்கின்றனர். அவர் மறைவால் பெருந் துயரத்திற்கு ஆளாகியிருக்கும் அவர்களின் அருமைக் குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினர்களுக்கும், உலகமே தழுவிய நண்பர்களுக்கும், தமிழ் அன்பர்களுக்கும் திராவிடர் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## வால்பாறையில் சாரல் மழையால் மூடு பனி!

### குவியும் சுற்றுலா பயணிகள்!

வால்பாறை, ஜூலை 6–

கோவை மாவட்டம் வால்பாறையில் இயற்கை கால நிலையை அனுபவிக்க சுற்றுலா பயணிகள் குவிந்த வண்ணம் உள்ளனர். வால்பாறை பகுதியில் கடந்த சில வாரமாக தென்மேற்கு பருவ மழை பெய்து வந்ததால், பார்க்கும் இடமெல்லாம் பச்சை பசேல் என காட்சி அளிக்கிறது.

ஆங்காங்கே வறண்டு போன அருவிகளில் நீர் வரத்து அதிகரித்து கண்களுக்கு விருந்தளிக்கிறது. அவ்வப்போது லேசான சாரல், சில இடங்களில் மிதமான மூடுபனி, சில இடங்களில் எதிரே வருபவர் தெரியாத அளவுக்கு மூடு பனி என அசத்தலான கால நிலை நீடிப்ப தால் வால்பாறை பகுதிக்கு சுற்றுலா பயணிகள் வந்த வண்ணம் உள்ளனர்.

சோலையார் அணை கடல் போல காட்சி அளிக்கிறது. பல பகுதிகள் தீவுகள் போல உள்ளது. இந்நிலையில் சோலையார் அணை பகுதி தற்போது சுற்றுலா பயணிகளின் சொர்க்க பூமியாக மாறி உள்ளது.

## சமத்துவம் கூட்டுறவின் மகத்துவம் - மினி மாரத்தான் துவக்க விழா !

### அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் துவக்கி வைக்கிறார்!

சென்னை, ஜூலை 6-

சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025 மற்றும் சர்வதேச கூட்டுறவு நாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு, தமிழக கூட்டுற வுத்துறை சார்பில் COOPATHON மினி மாரத்தான் போட்டி நடைபெறவுள்ளது 'சமத்துவம் கூட்டுற வின் மகத்துவம்' "கூடுவோம், ஓடுவோம் கூட்டுறவால் உலகை வெல்வோம்" என்ற கருப் பொருளை கொண்டு மினி மாரத்தான் சென்னை தீவுத்திடலில் இன்று (06.07.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 5.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் மினி மராத்தான் போட்டியை கொடியசைத்து துவக்கி வைக்க உள்ளார். மினி மாரத்தான் தீவுத்திடலில் தொடங்கி வெற்றி போர் நினைவுச் சின்னம், அண்ணா சதுக்கம், விவேகானந்தர் இல்லம் வரை சென்று மீண்டும் அதே பாதையில் தீவுத்திடல் வந்தடையும் மொத்த தொலைவு 5 கி.மீ ஆகும். இப்போட்டியில் 18 வயது தொடங்கி 40 வயது உடையவர்கள், மேலும் 40 வயது முதல் அதற்கு மேல் 2000க்கும் மேற்பட்ட முன்பதிவு செய்து கொண்ட நபர்கள் ஆண், பெண் என கலந்து கொள்ள உள்ளார்கள்.

ஆண்கள் பிரிவுக்கு முதல் பரிசாக ரூ.30,000, இரண்டாம் பரிசாக ரூ.20,000 மூன்றாம் பரிசாக ரூ.10,000 வழங்கப்பட உள்ளது. பெண்கள் பிரிவுக்கு முதல் பரிசாக ரூ.30,000, இரண்டாம் பரிசாக ரூ.20,000 மூன்றாம் பரிசாக ரூ.10,000 என வழங்கப்பட உள்ளது. பங்குபெற்ற அனைவருக்கும் பதக்கம் மற்றும் சான்றிதழ்களை பதிவிறக்கம் (ONLINE DOWNLOAD) செய்யும் வகையிலும் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இதற்கான தனி ஏற்பாடுகள் தீவுதிடலில் செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலைத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி முன்னிலை வகிக்க உள்ளார்கள். அரசு முதன்மை செயலாளர், கூட்டுறவு உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்புத்துறை சத்யபிரதசாகு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் க.நந்தக்குமார் கூடுதல் பதி வாளர் (நுகர்பு பணிகள்) ச.பா.அம்ரித் மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கூட்டுறவா ளர்கள், சீர்மிகு பெருமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

## சமூக நல்லிணக்கம் நிலைக்க அரும்பாடுபட்டவர்!

### பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் மறைவு குறித்து – எம்.எச்.ஜவாஹிருல்லா இரங்கல்!

சென்னை, ஜூலை 6 -

"சமூக நல்லிணக்கத்திற்கு அரும்பாடுபட்டவர் பெருங் கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள்" என்று அவரது மறைவு குறித்து மனித நேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம். எச்.ஜவாஹிருல்லா விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம். எச்.ஜவாஹிருல்லா வெளியிட்டுள்ள இரங்கல் அறிக்கை வருமாறு:

பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் மறைவுக்கு பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் நிறுவனர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் உடல்நலக்குறைவினால் மறைந்தார் என்ற செய்தியறிந்து மிகுந்த துயரம் அடைந்தேன்.

சென்னை பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். திருவல்லிக்கேணி முஸ்லிம் மேல்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியவர். தனிப்பட்ட முறையில் என்னிடம் நெருங்கிய நட்பு பாராட்டியவர்.

ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட கவிதைகளையும் ஏராளமான நூல்களையும் எழுதியவர். தமிழ்நாடு அரசின் திருவள்ளுவர் விருது தினத்தந்தி சி.பா. ஆதித்தனார் விருது உள்ளிட்ட ஏராளமான விருதுகளைப் பெற்றவர்.

ஈழத் தமிழர்கள் பிரச்சினைக்காகவும் தமிழர்களின் உரிமைகளுக்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தவர். முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நேசத்தைப் பெற்றவர்.

சமூக நல்லிணக்கம் நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்கு அரும்பாடு பட்டவர்.

அவரது மறைவு ஈடு செய்ய முடியாதது. அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் தமிழ் ஆர்வலர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## தி.மு.க. அயலக அணி

## சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

**தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா அறிவிப்பு!**

சேலம் கிழக்கு மாவட்ட அயலக அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட க. திருநாவுக்கரசு அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு அவருக்கு பதிலாக **ச. பிரதீப்,** (5/103, ஆத்துமேடு, பனமரத்துப்பட்டி, சேலம்) அவர்கள் சேலம் கிழக்கு மாவட்ட அயலக அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 05-07-2025.

எம்.எம். அப்துல்லா, எம்.பி.,
செயலாளர்
தி.மு.க. அயலக அணி



ஓரணியில் தமிழ்நாடு மற்றும் மெட்ராஸ் TO சென்னை வளர்ச்சி குறித்து வாகனத்தின் மூலம் தெருக்களில் விளக்கவுரை வட்டக் கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார் தலைமையில் 122வது வட்டத்தில் வோல்டாஸ் பின்புறம் ஆலையம்மன் கோயில் தெரு சந்திப்பில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பபாளர் விஜய் வெங்கடேசன், ஜி.ஆர்.ராஜேந்திரன், பி.எஸ்.ஆறுமுகம், ஆகியோர் ஓரணியில் தமிழ்நாடு மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனைகள் மற்றும் வளர்ச்சிகள் குறித்து பேசினார்கள். இந்நிகழ்ச்சியில் 122வது வட்ட, மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட கழகத்தை சார்ந்த நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## தி.மு.க. மாணவர் அணி

## மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!**

### கரூர் மாவட்டம்

கரூர் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட செல்வி எஸ்.பிரியங்கா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாகவும் மற்றும் பின்வருபவர்கள் கரூர் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

**ந. அருள்முருகன்,** 152-50, புதுக்குளத்துப்பாளையம், வெங்கமேடு அஞ்சல், கரூர் மாவட்டம் - 639 006.

**செ.ஸ்ரீநாத்,** பள்ளபாளையம் & அஞ்சல், மண்மங்கலம் வட்டம், கரூர் மாவட்டம் - 639 002.

**செல்வி ச.யசோதா,** 42, புதுப்பாளையம், வைகைநல்லூர் அஞ்சல், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் - 639 120.

### நாமக்கல் மேற்கு மாவட்டம்

நாமக்கல் மேற்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட ச.ஸ்ரீமதன் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **கா.தீபன்** (123, மேற்கு தெரு, கொளக்காட்டுபுத்தூர் அஞ்சல், பரமத்திவேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம் - 637201) மற்றும் **பா.கார்த்திக்** (56/1ஏ, கூட்டப்பள்ளி தெரு, திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்) ஆகியோர் நாமக்கல் மேற்கு மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

### தஞ்சை வடக்கு மாவட்டம்.

தஞ்சை வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட க.செந்தில்குமார் அவர்கள் தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **ஆர்.ஏ.சண்முகநாதன்** (20பி/64, சாமி சன்னதி தெரு, தாராசுரம், கும்பகோணம், தஞ்சை மாவட்டம் - 612 702) அவர்கள் தஞ்சை வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட அந்தந்த மாவட்ட மாணவர் அணி நிர்வாகிகளுடன் மேற்கண்டவாறு நியமிக்கப்பட்டவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 05-07-2025.

இரா. ராஜீவ்காந்தி
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

## கரூர் மாவட்ட செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி அறிவிப்பு!



கரூர் மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் இன்று (06.07.2025 ஞாயிற்றுக்கிழமை) 11.00 மணிக்கு கரூர் மாவட்ட கழக அலுவலகம் (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், கழக நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம் எம்.எல்.ஏ., அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.இளங்கோ எம்.எல்.ஏ., கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க. சிவகாமசுந்தரி எம்.எல்.ஏ., கழக கொள்கை பரப்பு எம்.எல்.ஏ. துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தகர் அணி துணை செயலாளர் வே.பல்லவிராஜா, கழக தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

அதுசமயம் மாநிலநிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள்–பொறுப்பாளர்கள், மாவட்ட அனைத்து அணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்

பொருள் : 1. தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கரூர் மாவட்டத்திற்கு வருகை குறித்து

2. கழக வளர்ச்சி பணிகள்

வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ.
செயலாளர், கரூர் மாவட்ட தி.மு.க.



ஓரணியில் தமிழ்நாடு என்ற மாபெரும் முன்னெடுப்புத் திட்டத்தில் கழக உறுப்பினர்கள் சேர்க்கையை சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி, 101 வது வட்டத்திற்குட்பட்ட பாகம் 78–ல் அமைந்துள்ள வ.உ.சி. காலனியில் மக்களை நேரில் சென்று சந்தித்து வீடு வீடாகச் சென்று நம் மண், மொழி , மானம் காக்க கழகத்தில் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுத்து படிவம் மற்றும், மக்களுடன் ஸ்டாலின் (APP) வழியாக மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, எம்.கே.மோகன் எம்.எல்.ஏ, பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், தொகுதி பார்வையாளர் தமிழன் பிரசன்னா, கழக தகவல் தொழிட்நுட்ப அணி துணை செயலாளர் கார்த்திக் மோகன், மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன் 101 வது வட்டச் செயலாளர் க.கோவிந்தராஜ், 101 (அ) வது வட்டச் செயலாளர் சி.பி.திருமலை, 101 வது வட்டக் கழக நிர்வாகிகள், (BLA2), (BDA), (BLC) நிர்வாகிகள் இருந்தனர்.